உ

சிவமயம்.

# சர்வஞானோத்தரம்,

## ஞானபாதம்.

## தமிழ் மூலம்.

இது
மிகஅருமையாகக் கிடைத்த சிலபிரதிகளைக்கொண்டு
பரிசோதித்து

மதுரை

ஸ்ரீலஸ்ரீ. குட்டையையா அவர்கள் மடம்

**செல்லப்பசுவாமிகள்**

விருப்பத்தின்படி

மதுரை வித்தியாபாநுப் பத்திராதிபர்

மு. ரா. கந்தசாமிக் கவிராயரால்

மதுரை:
விவேகபாநு அச்சியந்திரசாலையிற்
பதிப்பிடப்பெற்றது.

சௌமியவரு புரட்டாசிமீ

11-1

11-1

KOVILOOR ANDAV... LIBRARY, KOVILOOR
39226

உ
கணபதி துணை.
திருச்சிற்றம்பலம்.

---

# சர்வஞானோத்தரம்.

## காப்பு.

முத்திவிநா யகன்மனத்தின் மூரணறுவான் முடுகிநில
முதல்வி ளக்கும்
அத்திவிநா யகனெனவந் தவித்தையொழித் துவிந்தையளித்
தறத்தை யாக்குஞ்
சத்திவிநா யகனுபர்ந்த தாணுவிநா யகன்றோற்றந்
தருமோ ரட்ட
சித்திவிநா யகன்மதுரைச் சித்திவிநா யகனிருதாள்
சிரத்தின் வைப்பாம்.

## நூல்.

### எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

பசுபாச சொரூபசுபா வமுமுயிர்கட் கறுதி
பாசசம்பந் தமுங்கேட்பா னிச்சித்தேன் முந்திப்
பசுவோத வேண்டுவதோ பாசமது முன்னர்ப்
பகரவேண் டுவதோவப் பாசந்தான் யாது

பசுவேமெதைக் காரணத்தாற் பாசபத்த னானென்
பகரதிகா ரத்தோடு கூடியவப் பதியார்
பசுபாச வதிகார ரகிதசிவ னெனத்தப்
படியிருப்ப னெனமுருகற் கரனருளிச் செய்வான். (க)

பசுவாவ தான்மாவப் பசுவசுதந் திரனும்
பகர்சின்மாத் திரன்மலதா டிதன்மலத்தின் மூடன்
இசையாருங் கிரியையிலான் நித்தியசம் சாரி
யீசுவர னல்லான்கின் சிக்ஞனுமா யிருப்பன்
அசையாத சிவத்துவஞ்சே தனவான்மா விடத்தி
லனாதியே மலத்தடையாஞ் சிருணகா ளிதம்போல்
திசையாருஞ் செப்பிரத குளிகையிற்பொன் னாம்போற்
சிவனுமெய்ஞ் ஞானத்தாற் சிவத்துவத்தைப் பெறுமே.

பாலினு ணெய்மறைந்து நின்றாற் போலப்
பசுமலத்தான் மறைந்துசிவத் துவம்விளங்கா திருக்கும்
ஆலவிடத் தான்மோகித் தவனைமந்தி ரத்தா
லௌடதத்தாற் றீர்க்கும்விட காரிபோற் குருவுஞ்
சாலவுலோ கங்களைவன் னியினறவைத் தூதித்
தமனியமாக் கும்போன்மந் திரக்கிரி யையினாற்
சீலமிகுந் தீக்ஷைவன்னி யான்மலத்தை நீக்கிச்
சிவத்துவஞ்செய் வார்வாயு பூதரா யிருந்தே. (௩)

பாசமா ணவமாயை கன்மமென மூன்றும்
 பசுக்குணம்போ லிருக்குமவை யென்போல வென்னில்
ஆசறுமா ணவஞ்செம்பிற் களிம்புபோற் சகச
 மாபிருக்கு மாயைபூ தாதிகலே யிருப்ப்
பேசுமுப்பா னென்றொடுமா கந்துகமா யிருக்கும்
 பிறங்குசுபா சுபவடிவாய்ச் சுகதுக்கந் தானாய்
மாசுருமுன் கழியப்பின் னும்பிரவா கத்தின்
 வருஞ்சாங்கு சற்கிகமாங் கன்மமலந் தானே. (ச)

கருமத்தாற் சடமுண்டாஞ் சடத்தி னானே
 கர்மமுண்டாம் பூர்வத்தார்ச் சித்த வந்தக்
சருமத்தின் பயனிப்போ தெடுக்குந் தேக
 காரணமாங் கருமமசத் தாத லானே
கருமத்துக் காயசடங் கூட்டு மீசன்
 கருதுமவற் றினுக்குவியஞ் சகனுப் நின்று
கருமத்தின் பாகமின்றேற் பிரள்யமா முண்டேற்
 கருதருசம் சாரமாங் கருதுங் காலே. (ரு)

இந்தவுட னுசோறப்பத் திகளோடு கூடி
 யினியவா காரமயத் திருக்குமவ்வா காரம்
வந்தபரி ணமத்தா லிரதமுண்டாம் விடய
 மருவுசங்க தோடத்தாற் குணசங்கச் சார்பான்

அந்தவுயிர் சருவபரி பூரணனு னாலும்
அகர்த்தாவு மாப்பந்த முறுவனென்போ லென்னில்
தந்தைமகன் பிழைகண்டோ ரிடைப்பிணிக்கு மாபோற்
சங்கரனு லான்மாவும் பந்திக்கப் படுவன். (சா)

பதியெனவே சொலற்குரிய பரமன்மந்தி ரான்மா
பஞ்சமந் திரதேகி மந்திரங்கட் கெல்லாம்
அதிபதியைந் தொழில் புரிவோன் பதவருணு திகளா
னருச்சனைபண் ணப்படுவோன் சடபுவனங் களினுக்
குதவியா தாரங்கா மியங்களெல்லாங் கொடுப்போன்
யோகபீ டத்திருப்போன் ஞானகன்ம மொப்பான்
அதிதூல சூக்குமமிச் சிரனுமா யிருப்பா
னருண்மனோன் மனிமுதல்வ னவன்சதா சிவனே. (எ)

பரமசிவன் சதாசிவனென் பதிக்கு மேலோன்
பகர்நிரஞ்ச னன்னிரா மயனிரா தாரன்
தருவருண ரூபமிலான் சருவச்ஞன் சாந்தன்
சருவபரி பூரணன்சர் வான்மாவா யிருப்பான்
அருள்சர்வதோ முகனசிந்தி யன்னறிவுக் கெட்டா
னதிசூக்கு மன்னிரா லம்பனென்று முள்ளான்
ஒருவன்சத் தியினன்வியா பகனப்பிர மேய
னுவமையிலான் றிலதயிலத் துட்புறம்பொத் துறைவோன்,

## சுவான்மசாக்ஷாத்காரம்.

முத்தியுபா யம்பகர்கேம் பரமரக சியம்யா
முன்னொருவர்க் குபதேசஞ் செய்ததன்று குருவால்
வைத்தபா ரம்பரியத் தறிவதுபல் சமய
வாதிகளா னறிவதன் றக்கிரா கியமாய்
அத்துவய மாயதிசூக் குமமாநிட் களமா
வறிகின்றான் வத்துவைபா தொருவனவன் சிவனாம்
ஒத்தபெருஞ் சமுசாரப் பிறப்பிறப்பை யொழிக்கு
முயர்ஞான மிதுசருவ தோமுகமா யிருக்கும். (௩

சருவகத மாய்ச்சருவ வியாபகமாய் விளங்குஞ்
சருவகதத் துவமயமாய்ச் சருவதோ முகமாய்ச்
சருவதத் துவாதீத மாச்சருவான் மாவாய்த்
தகுபொருளுக் கெலாமேலாய் வாக்குமனங் களினான்
அறிவரிதாய் நாமமின்றாய்க் குணங்குறியொன் றின்றா
யசிந்தியமா யிருந்தசிவ மேநாமென் றறிந்து
சிறுவிநிரு விகற்பமனத் துபாசிக்கக் கடவன்
நிகழ்த்துமிந்த வுண்மையா மெய்ஞ்ஞானந் தானே. ()

நித்தியமாய்ச் சாந்தமா யுளதாய்நிட் களமாய்
நிறைந்தசுயம் பிரகாச மாய்விகற்ப மின்றாய்

எத்துமவி பாவியமா யசந்தேக மாகி
யின்னதன்மை யிதுவென்ன நியமிக்க வரிதாய்
வத்துவிவி தமாய்விடயா தீதவகோ சரமா
யலிங்கமா யட்சயமா யானந்த மயமாய்ச்
சத்தியமிவ் வாறிருந்த பரசிவமு நானே
சாற்றுமிதற் கையமிலை யென்றறியக் கடவன். (கக)

சகலமந் திரமயமாஞ் சிவமு நானே
சகலமந் திரங்களுக்கு மேல தாகிச்
சகலகிருத் தியங்களுக்கு மப்பா லாகிச்
சகலகா ரணமாய சிவமு நானே
சகலமாய்க் காண்பதுங்கா ணுது மாய
தாபரசங் கமங்கண்முழு வதுமே நானே
சகலமாய் வியாபிக்கப் பட்டதுநா னென்னிற்
சகலபுவ னங்களுக்கும் யானே நாதன். (கஉ)

மன்னுமனே காகார மாம்புவன சமுக
மண்ணந்தஞ் சிவமுதலென் னிடத்திருப்ப வாகும்
என்னிடத்தி னின்றுலகெ லாம்பிரவர்த் திக்கு
மெவைகாணப் படுவகேட் கப்படுவ வெல்லாம்
இன்னுமகம் புறமுமெனல் வியாபிக்கப் பட்ட
வெனுதுசீ வனுனென்றுஞ் சிவன்வேறே யென்றும்

அன்னியமா மோகத்தாற் பாவிப்பா னியாவன்
அவனொருகா லங்களினுஞ் சிவத்துவத்தை யடைபான்.

சிவன்வேறே யென்றுநான் சிவனிலும்வே றென்றுந்
திரிவுபட வேருகக் காண்பதனை விட்டுச்
சிவனேநா னேயச் சிவனெனவொன் ருகச்
சிந்திப்பா னெவ்விடத்தும் வியாபகனு மாகி
அவனேயச் சறுவான்மா வானசிவ சொருப
மையமறக் காண்குவனு மநிபபாவ னையாற்
சிவனேநா னெனவிகற்பா தீதனு யிருந்த
சிவயோகிக் குச்சருவக் ஞத்துவமும் விளங்கும். (கச)

ஏவரொருவர் மாதேவர் பிறப்பிறப்பு மில்லா
ரென்றுவே தாகமத்தா னிசைப்பவரா யிருப்பார்
அவர்தாமே யகாயர்நிர்க் குணரவரே நானென்
றத்துவிதத் தையமற வறியாதான் பசுவாம்
அவனேயைந் தொழிலிற்பட் டிறந்துபிறந் துழல்வா
னுணர்ந்தவவன் சுத்தனு யழிவிலா திருக்குஞ்
சிவனேயா மையமிலே யாதலினுன் மாவைச்
சிவாகார மாயறிவ னவனேமெய்ஞ் ஞானி (கரு)

பரமபர மென்றுசிவ மிருவிதமா மவைகள்
பகர்தூல சூக்குமமாம் பரசொருப நிகழ்த்தின்

சருசருவோ பாதிரு ணியமாகிச் சச்சி
தானந்த மயமாகு மபரமைந் தொழிலும்
புரிசொரூப மாந்தூல மந்திரவத் தாகும்
புகலருஞ்சூக் குமஞானக் கண்ணுற்காண் குவதாம்
விரிவினின்னும் வாக்குவிகற் பங்களையிவ் கியம்பின்
மிகவுமனத் திற்கதிக மோகத்தை விளைக்கும். (கசு)

ஆதலினா லெவ்வுருவைப் பாவித்தான் சீவ
னந்தவந்த ரூபமெலாஞ் சிவரூப மாகும்
ஆதிசிவன் வியாபகனா தலினிந்த வாறே
யான்மவின் ஞானத்தைச் சுருக்கியுரை செய்தோம்
தீதினிவ்வா றுன்மசொரூ பகமாக விருந்த
சிவத்துவத்தை யறிந்தான்மா வைக்காண்பா னவனே
ஓதியசம் சாரசா கரங்கடப்ப னல்லா
லுபநிடதம் வேள்விதெய்வத் தானீந்த லரிதாம். (கஎ)

ஆன்மாவே பரமசிவ மெனவுண்மை யாக
வறிகின்றா னவனெந்த வவத்தையடை யினுமவ்
வான்மாவே பரமுத்தி யெளிதடையு மிந்த
வான்மலா பத்தையொத்த லாபம்வே றில்லை
ஆன்மாவே விசிட்டகார ணாதீத வாக்கு
மனாதீத சருவஞ் ஞனபூ ரணனும்

ஆன்மாவே பரமசிவ சொருபமா கலினு
லான்மரூ பத்தையே சிந்திக்கக் கடவன். (கஅ)

அகம்புறந்தா ரஞ்சமீப மின்றாய்நிட் களமா
யதிகசுயம் பிரகாச மாய்ப்பிரம மாகித்
தகுங்குறுக்கு மேல்கீழுட் புறம்பெங்கு மொக்கச்
சருவரூ னியத்திருந்த தற்சொருப மாகிப்
பகர்ந்தரூ னியமரூ னியமிரண்டு தொடர்விற்
பதிப்பதுமன் றாகிநிரா தாரநிரா மயமாய்
நிகழ்ந்தகுண தீதவர்ண ரூபரஙி தனுமாய்
நிரஞ்சனமா யான்மாவைச் சிந்திக்கக் கடவன். (கசு)

வன்னமாச் சிரமமுயர் தவஞ்செபந்தி யான
மந்திரந்தீர்த் தந்தெய்வ வுபாஸ்திதிக்கு காலஞ்
சொன்னதரு மஞ்சாதி சங்கமெலாம் விட்டுச்
சுயம்பிரகா சத்தினே நிராசிரப ஞகி
அன்னியசிந் தனைவிட்டுச் சகலபதார்த் தத்து
மாசையற்றுப் பாவனு தீதனு யென்றந்
தன்னுலே தன்னைத்தன் னிடத்திலே தானே
தானிருந்து சிந்திப்பர் தகுஞானத் தவரே. (உ௦)

சித்தமா னதுவேமென் றையுஞ்சிந்தி யாமற்
சிந்தியா வசிந்தியமவ் விரண்டு மின்றாய்த்

தத்துவா தீதநிட் களசொருப மான
தற்சொருப மறிந்தாலெச் சுகமுண்டச் சுகமே
நித்தியநிர் விகற்பமாய்ச் சிந்திக்க வரிதாய்
நிரதிசயா னந்தமா கியபரம சுகமாம்
அத்துரிய சுகமேது திருட்டாந்த மின்று
யாகியந்தா தீதமா முத்திசுக மாமே. (உக)

உறுவிடய சங்கமனே வியாபாரம் போக்கி
யுன்மனிபா வகமாவ துயர்பரம சுகமா
நிறுவிநிரு விகற்பமா யிலயித்த போது
நிரதிசயா நந்தமா கியசுகமும் விளங்கும்
சறுவதிக்கு தேசகா லங்கள்யோ கிக்காஞ்
சரியைகிரி யாயோக சமயநிய மங்கள்
செறிவன்னுச் சிரமங்கள் முதலாய நிகழ்த்துந்
தேசகா லந்திக்கு சிவஞானிக் காகா. (உஉ)

சுரபிகள்வ ருணம்பலவா யிருந்தாலு மந்தச்
சுரபிகளின் பாலேக நிறத்திருந்தாற் போலப்
பரவருணச் சிரமம்பல வானாலு ஞானப்
பான்மையொரு படித்தாகு மாகலினெவ் விடத்தும்
பெருவிபா பகமாகிச் சருவதோ முகமாம்
பிரமத்தி னிடத்திலே சித்தத்தை வைத்துக்

கருமவனுட் டானங்க ளனைத்துமுற்றத் துறந்து
கருத்தடங்கி நிருவிகற்பத் திருப்பவன்மெய்ஞ் ஞானி.
ஞானிக்குப் பொருடேட வேண்டுவதே யில்லை
நன்மையொடு தீமையில்லை விதிவேட மில்லை
மோனத்தே யிருந்தாலு மஃதினைவிட் டொன்றின்
முயற்சிபுரிந் தாலும்விழித் தாலுநினைத் தாலும்
போனத்தும் பானத்துஞ் சாக்கிரசொப் பனத்தும்
புகல்வாத சீதவெப்பு பாதிபே தத்தும்
வனைத்தார்த் திரியமச்சம் வியாதியினு மென்று
மேகாக்கிர சித்தத்தி லயித்திருப்ப னவனே. (உச)

பூதபௌ திகவர்த்த மானகா லத்தும்
புகலுமிலா பச்சேத மிவைவந்த விடத்தும்
தீதிலாத் தற்சொருப பாவனையே பண்ணிச்
செய்கருமத் தின்கண்வரு சுகதுக்க மோக
மாதிகர்த்திருத் துவபோக்தி ருத்துவங்க ளியாவு
மான்மதன்ம மன்றுபுத்தி தன்மமென வுணரா
ஓதுபிர கிருதியின்சம் பந்தமுற்று நீங்கி
யுபசிடதத் துண்மையுணர் பவனேமெய்ஞ் ஞானி. (உரு)
பிரமச்ச ரியவிரத மக்கினியின் வீழ்தல்
பிண்டோத கக்கிரியை பிரவிர்த்தி நிவிர்த்தி

புரியுமருச் சனைகள்வரை பாய்தல்சுழி பாய்தல்
புண்ணியங்கள் பாபங்கள் நியமமுப வாசம்
தெரிசிவன் முத்தருக்கு வேண்டுவதே யில்லை
சிவஞான வமிர்தபா னம்பண்ணிக் கொண்டு
பரசிருட்டி கருமத்தி னகப்படா தென்றும்
பரசிவனைப் போலவே நித்தனு யிருப்பன். (உ௬)

இந்தஞா னிக்குமுத்தான் மாவென்று பேரா
மிவனுக்குப் பிரகிருதி பந்தமிலை யிவன்றன்
பந்தமாம் பிரகிருதி துடைத்தெந்த ஞான்றும்
பற்றுதலை யடையானஃ தென்போல வென்னில்
அந்தகா ரத்தையொழித் தொளிர்தருதீ பத்தி
னஞ்ஞான விருடமிபந் தற்சொரூபத் தொளிர்வன்
அந்தவெண்ணெய் நசிக்கலய மடைதருதீ பம்போ
லான்மவிருத் தியும்பரமுத் தியினிலய மடையும். (உ௭)

கடத்திருக்கு மாகாயம் போலச்சீ வான்மா
கருதுமகா காயம்போற் பரமான்மா விருக்குங்
கடத்திருக்கு மாகாயங் கடமுடைந்தான் முன்னர்க்
கருதுமகா காயமா நிறைந்துநின்றாற் போலத்
திடத்தினுறு பிரகிருதி சம்பந்த மாய
தேகவுபா திகண்முழுது நீங்கியபோ தந்தச்

சடத்தமர்சீ வான்மாவே பரமான்மா வாகுஞ்
சர்வஞ்ஞ னுமெம்மாற் சொலப்பட்ட திறவே. (உஅ)

இந்தவண்ணம் யாதொருவ னறிகின்ற னவனே
நாமவனே சருவக்ஞ னபூரணனும்
முந்தியதத் துவசாலம் வித்தார மாக
மொழியாக மங்களுறீஇச் சாரச்சா ரத்தின்
இந்தவா கமத்துரைத்த யோகத்தைத் தேர்ந்தே
யிதற்குமே லறிபொருள்வே றில்லையெனத் தெளிந்தே
சிந்தைவிகற் பங்களெலாம் போய்க்காயங் கழிந்தாற்
சிவசுபா வந்தனது சுபாவமா யிருப்பன். (உகூ)

## ஆன்ம சமாதி.

சீவன்முத்த னயிருப்பான் விசேடஞா னத்தாற்
றேகாந்தத் துப்பரம முத்திமேல நிறைவாய்த்
தாவில்சரு வத்திரவி யாபியாய்க் கொண்டு
சராசரமூர்த் தாமூர்த்த மாகியவத் துக்கள்
யாவையுமா யிருந்தபிர பஞ்சத்துட் புறம்பொத்
தேகமாய்த் தற்றரும தருமியென வொன்றாய்
மேவுசிவ சுபாவமதே தனதுசுபா வமதாய்
விளங்கியதற் சிவசுபா வத்தைஇனி யுரைப்பாம். (௩௦)

வேறு.

சறுவஞ்ஞ தாதிருத் தியனாதி போதம்
அறைசுதந் தரதா வலுத்த சத்தி
நிறையநந்த சத்தி நிராமய வான்மா
செறிவிசுத்த தேக மிவைசிவத் துவமே. (௩க)

வேறு.

அத்துவிதந் துவிதம்விசிட் டாத்துவித மாமென்
றபேதம்பே தாபேதம் பேத மாக
முத்திபல வும்பகர்ந்தேம் பக்குவத்துக் கீடா
முத்தியதி காரிக்குச் சொன்னமுத்தி குகேள்
சுத்தவத்து விதமான சாக்ஷாத்கா ரதையாஞ்
சொன்னவிம்முத் திக்குமே லறிவதொன் றுமில்லை
சத்தியமா முதற்புனர் சத்தியமுக் காலும்
சத்தியமா கும்நாத்தி நாத்தி நாத்தி. (௩உ)

நிருவிகற்பத் தாற்சிவன் முத்தனா யிருப்பா
னின்மலபா வனையுடைய ஞானியா லவன்றான்
திரிதருகா லத்திலே தன்னையடைந் தோரைத்
திருநோக்கான் மனவாக்காற் கரசரணா திகளால்
அருளின்மல விருனீக்கி முத்தராக் குவந்வே
றவனையிகழ்ந் தோரதோ கதியடைவ ரவன்செல்

தரணிதல விசேடமா லயமூர்த்தி விசேடஞ்
சலந்தீர்த்த விசேடமாந் தானவனு மவனே. (௩௩)

ஆன்மாவு முபாதிபே தங்களினாற் பூத
வான்மாவந் தரான்மா தத்துவான் மாசீ
வான்மா மந்திரான்மா பரமான்மா வென்னவே
யாறுதிற மாம்பரமான் மாவுக் கப்பால்
ஆன்மாவே றிலேபூத பரிணமத் தாற்பூ
தான்மாவாஞ் சடமுயிரா னதிட்டிப்ப தாகும்
ஆன்மாவா னுதியைம்பூ தபீசதன்மாத் திரைகள்
மலிகரணத் திரயக்கூட் டறவுசட மாமே. (௩௪)

## பூதான்மா.

மன்னியவிவ் வான்மசா க்ஷாத்கார மாக
மருவுகர ணங்கள்சிவ கரணங்க ளாக
இன்னுமொரு பாயநாஞ் சொல்லுவோ மதுதா
னியம்புநிரு மலனுதற் கேதுவா யிருக்கும்
அன்னியமி லாதுசரு வமுநமது சொருப
மாயறித லாற்சரு வமுமத்து விதமாம்
வன்னமரு வியபிரதி பாவமா யான்மா
மாயைமா மாயையஞ் ஞானமுத லாக. (௩௫)

னிறையுபா திகளோடுங் கூடியது வதுவாய்
நிற்றலா னுஞ்சிவன்ற னனுக்கிரகத் தானே
அறையுபா திகணீங்கி நிற்றலா னுந்தா
னுறுபே தப்படுவ னான்மாவே றென்னின்
குறைவில்சாத் துவிதவி ராசததா மதமாய்க்
கூறுபல விதமாகிச் செயல்களும்வே றாகிப்
பெறுகுணபே தத்தினா ரான்மாத் தானே
பேதாபே தங்களா கக்காணப் படுவான். (௫௬)

இந்தவுயிர் சிற்சத்தி மனத்துடனே கூடி
யிந்திரியத் தொடுகூடி யிந்திரியம் விடய
பந்தமொடு கூடியொன்று தனைப்பிரவிர்த் திக்கும்
புகருடலந் தொறும்பிரதி பாவமா யிவணம்
சந்தத முதுவதுவாய் நின்றுசேட் டிக்குஞ்
சாத்துவிக ஞானத்தைப் பிரகாசம் பண்ணு
மந்தரா சதகுணமி ராகத்தைப் பண்ணு
மருவியதா மதமோகந் தன்னையே விளைக்கும். (௫௭)

சாத்துவித ஞானத்தாற் றயைதிடநல் விநயந்
தயிரியஞ்சத் தியமுளவாம் ராசதரா கத்தால்
வாய்த்ததறு கண்மையிடம் பங்கோ பங்கண்
மருவுந்தா மதமோக மசத்தியமஞ் ஞானம்

ஏத்தலுறு பிரமாத மாலசிய மிவைதோர்ந்
திராசததா மதகுணத்துட் பிரவிருத்தி யின்றிச்
சாத்துவித குணத்தையே வர்த்திக்கப் பண்ணிற்
றர்மார்த்த காமமோட் சங்களுள வாமே. (௩அ)

தாமதமிக் கிருகுணங்கீழ்ப் படினுமிரா சதமே
தழுவிமற்றை யிருகுணந்தாழ் படினுமெண்ணில் காலந்
தீமைபுரி சம்சாரத் திறந்துபிறந் துழல்வன்
செப்பிபசாத் துவிதமே முத்திக்கு நிமித்தம்
ஆமினிய பிருதிவியப் புத்தேயு வாயு
வாகாச மெனுமைம்பூ தங்களுடன் கூடிப்
பூமிதனின் மற்றுளதத் துவங்களைக்கீ ழிட்டுப்
பூதமயந் தனையடைவ னவன்பூத வான்மா. (௩௯)

வத்திக்கு மாகாயத் தன்மையைச்சத் தத்து
மருவியநற் பிராணனொடு மபானனொடுங் கூடிச்
சத்தப்பிர விர்த்தியொடு நிவிர்த்தியொடு மாகச்
சஞ்சரிக்கு மவதரமங் கரான்மா வாகும்
சத்தப்பிர விர்த்தியினாற் றெய்வபா டையினாற்
சகலமா கியபலசாத் திரங்களுமே யுண்டாஞ்
சத்தத்தாற் பசுக்கண்மிர்கங் கள்பறவை களூர்வ
சரிப்புனவாஞ் சகலசீவர் களும்பிரவிர்த் திக்கும். (௪0)

சத்ததன்மாத் திரைபரிச ரூபதன்மாத் திரைகள்
தருமிரத கந்ததன்மாத் திரைகளென வியம்பும்
இத்தகைய பஞ்சதன்மாத் திரைமனமாங் கார
மெய்புத்தி யொடுகுணதத் துவமவ்வி யத்தம்
வித்தியாதத் துவம்புருடன் கலைகால மாதி
விரவுசுத்த வித்தையீ சுரஞ்சாதாக் கியங்கள்
சத்திசிவ மாகுமிந்தத் தத்துவமா றாறுந்
தழுவிச்சி விக்குமவ தரந்தத்து வான்மா. (சக)

தத்துவத்தைப் பாசங்க ளென்றுமல மென்றுஞ்
சாற்றலுமாஞ் சகசமுமாய்ச் சர்வகமு மாகி
நித்தியமாய்ச் சகலவான் மாவிடத்து மிருக்கு
நிகழ்த்துமிந்தத் தத்துவங்கள் பிராகிருத மென்றும்
ஒத்தபிரக் கிரியையென்று மிரண்டுவித மாகு
முரைத்தபிரக் கிரியையே சிவதத்துவங் களைந்து
மத்திமைசூக் குமைவாக்கு பைசந்திவை கரியாம்
வாக்குமா யிவைதாமே வயிந்தவமு மாகும். (சஉ)

தருகால மாதியா மாயையீ றாகச்
சாற்றியதோர் வித்தியா தத்துவங்க ளேழும்
அருள்பரவு மாயேயப் பிரக்கிரியை யாகும்
ஆன்மதத் துவங்களோ ரிருபத்து நான்கும்

விரவுபிரா கிருதபிரக் கிரியையே யாகும்
　　விந்துமோ கினிமான்கள் பிராகிருத மாகும்
இருமையினிற் பிரக்கிரியை யறிகுவதே ஞான
　　மிந்தஞா னத்தையொத்த ஞானமொன்று மின்றே. ()

வேறு.

நித்தனர் வியாப கத்தை நிகர்வியா பகம்வே றில்லை
சித்தியாஞ் சிவயோ கம்போற் சித்திகள் பிறிதொன் றில்லை
உத்தமப் பொறுமைக் கொப்பா யொன்றுவே றில்லை யிந்தத்
தத்துவ ஞானத் திற்குச் சரியான ஞான மின்றே. (௪௪)

வேறு.

தத்துவம்யா வற்றுடனும் பிரிவறவெப் பொழுதுஞ்
　　சஞ்சரிப்பா னெவற்றும்வியா பகனுபு மிருப்பான்
தத்துவத்துட் டனித்தனிகூ டுதல்பிரித லாகத்
　　தான்காணப் படுவன்வியா பகத்திலிருந் தாலுந்
தத்துவத்துக் குகயாத்த மனமுமுள விந்தத்
　　தத்துவஞ் சீவிக்கு மறுதயமா மிந்தத்
தத்துவத்தி னுதாசீனம் புரிவதத்த மனமாஞ்
　　சகலாவத் தையினெல்லாத் தத்துவத்து நிகழ்வான்.
தத்துவம்பா தொன்றுமிக்குச் சீவிக்கு மந்தத்
　　தத்துவத்தின் விடயவியா பாரமா யிருப்பான்

சித்தமுணர்ந் தனித்தியமாந் தத்துவத்தை நீக்கித்
தேகாதிப் பிரபஞ்ச வாதனையை யிழந்து
நித்தியமா நிர்க்குணமாம் பரமசிவ னிடத்தே
நிகழுமே காக்கிரசித் தத்திருந்து சீவன்
முத்தனு மவன்தேகாந் தத்திலே பரம
முத்தியடை வான்செனன மோகத்தை மருவான். ( )

## சீவான்மா.

பிருதிவியப் புத்தேயு வாயுவா காயம்
பிறங்கியசோத் திரந்தொக்குச் சட்சுநா நாசி
மருவியசத் தப்பரிச ரூபரச கந்தம்
வாக்குப்பா தம்பாணி பாயுருவோ டுபத்தம்
மருள்செறியு மனம்புத்தி யாங்காரஞ் சித்த
மாயபிர கிருதியொடுங் குணங்களொடுங் கூடிச்
சொருபமதாத் தனுகரண புவனபோ கத்துட்
டுக்கசுக பலத்தையனு பவிப்பான்சீ வான்மா. (௪௩)
மந்திரவான் மாவையினிப் புகல்கேமச் சொருப
மந்திரமா வணபலசோ கங்களையும் போக்குஞ்
சுந்தரதிவ் வியமாக்கும் பாவகர மாய்க்குஞ்
சுராசுரரி யக்கரி ராக்கதர்கின் னரர்கள்
கந்தருவர் திரியக்குச் சாதிபிதிர் மாதர்
மனிதர்சித்தர் வித்தியா தாரர்கள்பை சாசர்

தந்தபிரு திவிமுதலா நாதமீ ருய
சகலதத்து வமுஞ்சகலான் மாவிடத்து மிருக்கும். ()

சகலமா மந்திரமு நித்தியமா யிருக்குந்
தாவரசங் கமங்கண்மந் திரமின்றி யிராவர்
மிகவுமந்தி ரங்களா னதிட்டிக்கப் பட்ட
விக்கிரக மாயிருக்கும் யாதொருதே வதைக்கும்
அகரமுன்னே டாறுபதி னன்காமக் கரங்க
ளந்தவிந்து வுடனந்தத் தேவதைநா மங்கள்
பகர்வனமந் திரரூப மாருமிவை தாமே
பரமமாய்த் தத்துவான் மகங்களா யிருக்கும். (சகூ)

பதினன்கு பதினென்றே டைந்துமூன் றொன்று
பகரிரண்டு நான்காறீ ராறே மூறும்
விதிவழிசங் கிதைமுப்பான் மூன்றுறவ் வடைவே
வீசமாம் விந்துவினே டலங்கரிப்ப வாகும்
அதினிதயஞ் சிரசுசிகை கவசமிவை தீர்க்க
மந்திரநேத் திரமனுச சுவராச யுத்தம்
இதனினத் திரம்விசற் சனியாந்த மியாவு
மீறுநமோந் தமுமாதி பிரணவமு மாகும். (௫0)

இதாதே வதைக்குப்பஞ் சப்பிரமங் கூடா
தீசனுக்கா மாருக்கு மங்கங்கள் கூடும்

அதிபதியா வாகன தாபனர்க் கியங்க
ளாசனஙி யாசந்தா ரணை தியான கன்மம்
விதிவழியர்ச் சனைபலிவி தானசெப வோமம்
விமலனுக்கெவ் வாறுரைத்தோ மந்தவிதி வழியே
கதிதருமர் திரக்கியைய வெல்லாத்தே வதைக்குங்
கருமம்வழு வறப்புரியக் கருமசித்தி யாமே. (ருக)

மந்திரஞ்சொல் லாதிருந்த கிரியைகட் கிதப
மந்திரத்தி னூற்புரிக மந்திரகன் மங்கள்
அந்தவந்த விதிவழுவா மந்திரத்தாற் புரிக
வாதரவான் மந்திரத்தை யனுசரிக்கு மவன்றான்
எந்தத்தே வதையையருச் சனைபுரிவ னந்த
விறைவடிவாய்த் தனைப் * பரமீ கரணம்பண் ணிடுக
மந்திரமெத் தேவதைக்கெம் மந்திரமுண் டந்த
மந்திரம்வா சகமாமத் தேவதைவாச் சியமே. (ருஉ)

மந்திரங்கள் வாசகோ பாஞ்சுமா னதமாய்
வருதூல சூக்குமமாய்ப் பரமுமா யிருக்குஞ்
சுந்தரவாச் சியமாய சித்திதருந் தூலஞ்
சூக்குமந்தா னிகழ்யோக சித்திதரும் பரம
மந்திரந் தான்பிறப்பை மருவிடா தினிமேல்
மாண்புடைய பரமுத்தி மருவுவித் திடுமால்

* பரமீகரணம் - பாவித்தல்,

விந்துவெலாம் விசாந்த சையுத்த மாகும்
விசத்தோ டிரச்சுவஞ்சேர்ந் திடும்பஞ்சப் பிரமம். (ருரு)

ஒருதீபந் தனிற்பலதி பங்கொளுத்தி னற்போ
லுயர்சிவமந் திரத்தந்த மந்திரங்க ளுண்டாம்
விரவுதே வதைநான விதவருண மாக
மேவுகினு மந்திரங்க ளெல்லாமொன் றேயா
மருவுபுனல் பலவிதமா யினுஞ்சலமென் றொன்றா
வழங்குதல்போ லாகுநவில் தேவாரா தனைகள்
புரிவினெந்த மனுவினாற் சாதித்தா னதனாற்
புரிந்தவந்த விறைவடிவாய்ப் பூசைசெய்யக் கடவன். ()

சருவகெதன் கபாலிசூக் குமன்பழையோன் துருவன்
சாசுவதன் வியாபியவ்வி யத்தனே பத்தன்
சருவதத்துவங் களினும்வியா பிகித்தியசம் சாரி
சனாதனனே சுதந்தரவீ னன்கிஞ் சிக்ஞன்
அறிவின்மல தாடிதன்சம் மூடன்கேத் திரக்ஞன்
அநீஸ்வரனக் கிரியன்புற் கலிபுருட னன்மா
செறிசெந்து புமான்சின்மாத் திரன்பேர் சீவன்
செப்புமிவைபசுத்துவவான்மாவின் னும்பலவே. (ருரு)

பரமான்மா வினிப்புகல்கேம் பராற்பர தரனைப்
பகருமந்திரா தீதனை கிச்சருவக் ஞனைநித்

தருசகல ரூபமய னய்ச்சருவான் மாவாய்ச்
சருவகத னய்க்குணரு பவர்னரகி தனுமாய்
நிருவிகற்ப னய்நிரஞ் சனநிரா மயனாய்
நிராதார னகியைம் பூதவிபா பகனாய்த்
துருவனு யதீந்திரிய நிராக்கிரியனாய்ச் சர்வ
தோமுக னகியமை விலனுமா யிருப்பன். (ருஅ)

உரைசெய்புபா சகனவா னுருவமா யிருக்கு
முருவத்தைப் பாவிந்தா னுருவமே யாவன்
தரணி முதற் சிவதத்து வாந்தமாய்ச் சொல்லுஞ்
சடத்துவா ரூபமெல்லாம் ரூபமெனப் படுமால்
சொரூபதத்து வாதீத மானபர மான்ம
சொருபத்தைப் பாவிப்போ னச்சொருப மாவன்
அருளதனாற் சகலகா மியங்களையுங் கொடுப்பா
னன்மாவே யாறுவிதப் படுந்தொகையைச் சொல்வாம்.

பூதபரி ணமத்தாற் பூதான்மா வாவன்
புகல்சத்தம் பொருந்தலினந் தரான்மா வாவன்
மேதகு தத்துவத்தாற் றத்துவான்மா வாவன்
விளம்புபிர கிருதிகுணந் தழீஇச்சுகதுக் கங்கள்
திதறவே புசித்தலிற் சீவான்மா வாவன்
றிகழ்தருமந் திரப்புணர்வான் மந்திரான்மா வாவன்

யாதுமற விட்டவவன் பரமான்மா வாவன்
ஏகான்மா வேயாறு திறனுமா யிருப்பன். (ருஅ)

பரியாய நாமமின்னு மனேகமுள வுயிர்க்குப்
பலவுலகங் களுட்பலயோ னியுட்பலதே கத்துட்
புரிகருமத் தஞ்ஞான மாவரிப்பா னாகிப்
பொருந்துசுக சோகிதனாய் ஞானம்வருங் காறும்
விரிசெனன மரணத்துட் சுழலுவன்மெய்ஞ் ஞான
மேவினாற் சாந்தமாய்ப் பரமமாய் விளங்கும்
பரகதியா மப்போது சகலவுபா தியும்போய்ப்
பகர்சீவப் பிரமமே பரப்பிரம மாகும். (ருசு)

தெரிதருமோ ரான்மாவுக் கனேகநா மங்கள்
சித்தபே தங்களினால் விவரிக்க லாயிற்
றொருவனா யிருக்கப்பல் பேர்வரலெற் றென்னி
லொருவனே யுபாதிபே தங்களுட்கூ டுதலாற்
பெரிதுதனித் தனிநாம மாயினனா மதனாற்
பேரிலா தானுக்குப் பிராந்தினா னத்தாற்
கருதிவிமோ கிதரானே பலபலநா மங்கள்
கற்பிக்கப் பட்டவவை கற்பனைப்பே ராமால். (சுo)

அவிர்சகல பூதமய மாயிருக்கும் யாதோ
ரைசுவரிய முளதந்த வைசுவரிய மாய

சிவனிடத்து நித்தியபா வனையாவ னொருவன்
செய்கின்ற வனனந்தச் சிவாகார மாவன்
சிவசாக்ஷாத் காரதைக்குப் பிராப்தனா யிருந்து
சிவன்வேறு சீவன்வே றென்றிரண்டாக் காண்பான்
அவன்செனன மரணத்தை யடைவனா தலினா
னத்துவித பாவனையே முத்தனா தரிப்பான். (௬௧)

அருள்செறிவு மோட்சகா ரணமாக விளங்கு
மத்துவித பாவனை யார்க்குவரு மென்னிற்
சரியைகிரி யாயோகங் களைச்செனனந் தத்துந்
தக்கவனுட் டானஞ்செய் தகனானின் மலனாய்த்
தெரிசிவசாத் திரங்களையே கேட்டுச்சிந் தித்துத்
தெளிந்துகன்ம வொப்புமல பாகமுமே வந்தாற்
பெரியவத்து விதஞானம் வருமிவ்வா றன்றிப்
பெத்தர்க்கு விளங்காது விளக்கினும்வா ராதே. (௬௨)

யாதொருக்காற் சருவதோ முகமாக வான்மா
ஞானத்தா னின்மலனாய் விளங்கிடுமப் போது
சோதிமய னாகியெக்கா லத்துமழி வில்லாச்
சுயம்பிரகா சத்திருக்குந் தன்னைத்தா னறிவன்
ஆதிபிர பஞ்சமெலா மபின்னமே யாவு
மநித்தமே யெனப்பாவ சடாத்து வாவும்

ஓதியதோ ரபாவமுஞ் சூனியமுங் கடவா
துபாதியாஞ் சகலவா தனைகளையு நீங்கி. (௬௩)

ஆனசக காரணனும் புருட னானே
வக்கரவத் துவநானே பரப்பிரம நானே
ஈனமன்றி யழிவற்ற பரசிவனு நானே
யென்றுசிவ யோகத்தாற் கருமத்தை யிழந்து
ஞானநிலை யாலைய முழுதுமறுப் பானாய்
நாடரிய சிவபர வைக்கியத்தை யடைந்து
மோனமா நிருவிகற்ப னாவரன்போ னித்த
முத்தனா வான்மவுபா சனைபண்ணக் கடவன். (௬௪)

நிர்க்குணமாய் நிர்மலமாய் நிருவிகற் பனுமாய்
நித்தநிரஞ் சனநிரா தாரநிரா மயமாய்
அற்புத மாய்ப்பிரா கிருதவப்பிர மேய
வசந்தேக மாயவிபா வியமாய்ச்சூக் குமமாய்த்
தற்பரமாய் ஞானவிழி யிற்காணும் விசுத்த
சாசுவத மாய்ச்சருவ சர்வகத மாகிச்
சிற்பரமாய்ச் சருவதோ முகவியா பகமாஞ்
சிவனைத்தன் னிடத்திலே பின்னமறத் தெரிந்து (௬௫)

மந்திரம் பதவர்ணம் புவனந்தத் துவங்கண்
மருவுகலை யாதிமூர்த் தாமூர்த் தமாக

முந்துபிரக் கிரியைமார்க் கங்களா மண்ட
முழுதுந்தன் னிடத்திருப்ப தாகவே கண்டோன்
சந்ததமுஞ் சருவதரி சனசர்வக்ஞ னாகிச்
சர்வபரி பூரணநின் மலவிமுத் தனுமாய்
வந்தகே வலபூத நிரதிசயா னந்த
மயனாகிச் சிவசாக்ஷாத் காரதையா யிருப்பன். (சாசா)

ஒருவசன மாகவே முடிந்தபொரு ளுரைத்தோ
மொன்றாகக் காண்பதுவே காட்சியின்னுந் திரும்பப்
பெருவசன மாகநீ பலபடக்கேட் டாலும்
பின்னுநா நிகழ்த்துவது மிந்தவுப தேசந்
தருவசன சமுதாயம் பலபொருளும் விளக்குந்
தடுமா று தேகமாய்த் தானேதா னாகி
நிருவசன மாஞான மோனமொன்று மின்றி
நில்லாத நிலையன்று மென்றுமுள திதுவே. (சுஎ)

சத்தியவா சகமுரைத்தே முன்னுமின்னு முரைக்கேஞ்
சிாக்ஷாத்கா ரதையாந்தா தான்மியசம் பந்தஞ்
சுத்தாத்து விதமிதுவே திரும்பாத முத்தி
துவிதாத்து விதம்விசிட்ட மதோபாக மாக
ஒத்தவசா தாரணசா தாரணகற் பிதங்க
ளுணர்ந்துசுயம் பிரகாச மாயெங்கு நிறைவாய்

தத்துவா தீதமாய்த் தனையறிதன் முத்தி
சர்வஞ்ஞா னோத்தரஞ்சம் பூரணஞ்ச மாப்தி. (சுஅ)

வெண்பா.

சருவஞா னோத்தரத்தைச் சந்ததமும் பார்த்தால்
வருமோ பிறவி மறித்திங்—கரிதான
பேரின்ப வெள்ளம் பெருகுமே பற்றொழித்த
தீரருக்கி தாமென்றே செப்பு.

சர்வஞானோத்தரம் முற்றுப்.

ஆகக் காப்புள்படக் கவிகள் எ0.

சிவகுருநாதன் திருவடிவாழ்க.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 39226

# புத்தக விளம்பரம்.

| | |
|---|---|
| சிவாகசியம் ... ... | ரூ. 3—0—0 |
| தனிச்செய்யுட்சிந்தாமணி (3815 பாடல்கள்) | 3—0—0 |
| சிவஞானபாஷ்யம் ... ... | 1—4—0 |
| மாம்பழக்கவிச்சிங்கநாவலர் பிரபந்தத்திரட்டு... | 2—8—0 |
| பாரதம் (தமிழ்ச்சங்கப் பதிப்பு) ... | 3—0—0 |
| வைத்தியசாரசங்கிரகம் ஷை ... | 3—0—0 |
| பன்னூற்றிரட்டு ஷை ... | 2—0—0 |
| சைவமஞ்சரி ஷை ... | 1—8—0 |
| ஞானமிர்தம் ஷை ... | 1—0—0 |
| கன்னியாகுமரித்தலபுராணம் ... | 1—0—0 |
| மதுரைத் தமிழ்ச்சங்கமான்மியம் ... | 0—4—0 |
| குமணசரித்திரம் ... | 0—8—0 |
| சித்தாந்தஞானரத்நாவளி ... | 0—6—0 |
| இராமேசுவரம்பர்வதவர்த்தனியம்மைபிள்ளைத்தமிழ் | 0-2-0 |
| மாலைமாற்றுமாலைமூலமுமுரையும் ... | 0—4—0 |
| பவாநிப்பிள்ளைத்தமிழ் ... | 0—2—0 |
| பரோடாகைக்குவார் மகாராஜாவின் மகோபந்யாசத்தமிழ்மொழிபெயர்ப்பு (படத்துடன்) | 0—2—0 |
| லாலா ரஜபதிராய் சரித்திரம் தமிழ் (படத்துடன்) | 0—2—0 |
| நன்னெறி மூலமும் உரையும் ... | 0—2—0 |
| திருஉருமாமலைச்சிலேடைவெண்பா திருப்பரங்கிரி இரட்டைமணிமாலை | 0—2—0 |

வி. பி. தபால்சார்ஜ் பிரத்தியேகம்.

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்,

விவேகபாநு அச்சியந்திரசாலை, மதுரை.

1 அணா ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு சோமவாரமகிமை, கார்த்திகைமகிமை, யானையெய்த படலம், இம்மூன்று புஸ்தகங்களும் அனுப்பப்படும்.

# விஞ்ஞாபனம்.

---

சைவாகமங்களில் மிகச்சிறந்ததென்று ஆன்றோரால் பாராட்டப்பெற்ற 'சர்வஞானோத்தரத்தின் ஞானபாதம்' ஆகிய இது மிக அருமையாகக்கிடைத்த சில பிரதிகளை வைத்து ஒப்பு நோக்கி எழுதுவோரால் நேர்ந்த அக்கரச் சோர்வுகளைமட்டுந்திருத்தி வாக்கியங்களை யெல்லாம் இருந்தவாறே யெழுதிப்பதிப்பிடப்பெற்றுளது. மூலப்பிரதியையும், அச்சிடுதற்கு வேண்டும்பொருளையும் உதவி இதனை அச்சிடுமாறு விரும்பிய பெருந்தகையாளர் மதுரை தெற்கு வெளிவீதி ஸ்ரீலஸ்ரீ குட்டையையா சுவாமிகள் மடத்திலெழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் செல்லப்பசுவாமிகளது தமிழபிமானமும் பெருங்கருணையும் மிகப்பாராட்டற்பாலன. இப்புத்தக வேண்டியவர்கள் ஷை மடாலயத்திலும் புதுமண்டப புத்தகக்கடை மூ. கருப்பணபிள்ளையிடத்திலும் பெற்றுக் கொள்ளலாம். இதன் விலை அணா. 0—1—0

இங்ஙனம்

மூ. ரா. கந்தசாமிக்கவிராயர்.

வித்தியாபாநுப்பத்திராதிபர்.

மதுரை.